3. தகவல் கோரல்

(அ) சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் துவக்க நாளிலிருந்து, ஒரு பிரச்சினையை நான் இந்த மன்றத்தில் தங்கள் வாயிலாக இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். ஆளுங்கட்சியானாலும், எதிர்க்கட்சியானாலும், எல்லோருக்கும் இந்த அவையிலே சம உரிமை உண்டு. அது எங்களுக்குக் கிடைக்காவிட்டால், பேரவைத் தலைவரிடத்திலே முறையிடுவோம். நீங்கள் எங்களுக்கு அந்த உரிமையைப் பாதுகாக்கிற நிலையிலே இருக்கிறீர்கள்; அதுதான் ஜனநாயக மரபு. எதிர்க்கட்சி இல்லாமல் ஆளுங்கட்சி இருக்க முடியாது. ஆனால் ஆளுங்கட்சிக்கு பெருமை; ஆளுகிற கட்சி அதற்குரிய மரியாதை உண்டு. அதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த அவையின் நடவடிக்கைகளை தமிழ்நாட்டு மக்கள், முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல படிப்பதைவிட பார்ப்பதைத்தான் அதிகம் விரும்புகிறார்கள். அரசாங்கத்தின் சார்பிலே Film Division சார்பிலே இங்கே படம் எடுத்து அதை எல்லாத் தொலைக்காட்சிகளுக்கும் எடுக்கிறார்கள் மற்றும் தருகிறார்கள். ஆனால் இதுவரையிலே நான் ஒளிவுமறைவு இல்லாமல் சொல்கிறேன்; முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆளுங்கட்சிக்குக் காட்டுகிற சலுகை, அவர்களுக்குத் தருகிற நேரம் இவற்றோடு ஒப்பிடுகிறபோது எங்களை நோஞ்சானாகக் காட்டுகிறபோது, மக்கள் எங்களுடைய கடமையில் நாங்கள் தவறிவிட்டதாகக் கருதுகிறார்கள். இந்தப் பிரச்சினையை பலமுறை இந்த மன்றத்திலே எடுத்துவைத்ததோடு மட்டுமல்ல; எனக்கு ஒரு தகவல் வந்திருக்கிறது. தூர்தர்ஷனில் இருக்கிற ஒரு பெரிய அதிகாரி இங்கே இருக்கிற செய்தித் துறையினுடைய இயக்குநருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறாராம். அதாவது நீங்கள் ஆளுங்கட்சிக்கே அதிகம் முக்கியத்துவம் தருகின்ற காரணத்தால் எதிர்க்கட்சிகள் எங்களோடு சண்டை போடுகிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. ஒரு குற்றச்சாட்டு என்றால், கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்றால் அதன் கடித நகல் ஏதாவது இருந்தால் அந்தக் கடிதத்தின் நகலைக் கொடுங்கள்.

திரு. துரைமுருகன்: நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டால், நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்; முதலமைச்சர் அவர்களுடைய பேச்சை, முதலமைச்சர் அவர்களுடைய மரியாதையை காட்டுவதிலே எங்களுக்கு ஒன்றுமில்லை. அமைச்சர் பெருமக்களைக்கூட காட்டட்டும். காரணம் அவர்கள் Treasury Bench-லே அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் எங்களுக்குரிய மரியாதை இல்லாத காரணத்தால் இது உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற காரணத்தால், ஆளுங்கட்சிக்கு சாதகமாகத்தான் அந்த அரசு நிறுவனம் இருக்கும். ஆகவே, தயவுசெய்து எல்லாத் தொலைக்காட்சிக்கும் அந்த வாய்ப்பைக் கொடுங்கள். அவர்கள் யார் யாரைக் காட்டவேண்டுமென்று விருப்பமாக இருக்கிறார்களோ, யார் யாரைக் காட்டலாம் என்று கருதுகிறார்களோ அவர்களைக் காட்டட்டும். எனவே எங்களுக்கும் நம்பிக்கை இருக்கும். ஆகவே ஒரு ஆளுங்கட்சிக்கு மட்டும் சாதகமான நிலை என்று வைத்திருப்பதை இந்த அரசு மாற்ற வேண்டும். அவர்கள் மாற்றுகிறார்களோ இல்லையோ பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு நீங்கள் பாதுகாப்பு அளித்து, நாங்களும் இங்கே முறையாகப் பணியாற்றுகிறோம்; எங்களுக்கும் கை தட்டுகிறார்கள்: எங்களுக்கும் கோபம் வருகிறது, நாங்களும் சிரிக்கிறோம். ஒன்றும் இல்லை. எப்போது சோர்ந்து இருக்கிறோமோ அப்போதுதான் காட்டுகிறார்கள். டல்லாக இருக்கும்போதுதான் காட்டுகிறார்கள். ஆகையால் நீங்கள் என்ன பண்ணுகிறீர்கள் உடனே இப்படி, இப்படி, இப்படி (சைகையுடன்) என்கிறார்கள் C.M.......

முற்பகல் 11-05

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறுகின்ற குற்றச்சாட்டை ஏற்க இயலாது. ஏறக்குறைய 4 மணி நேரம், அதற்கு மேலும் நடக்கின்ற அவை நிகழ்ச்சிகளை ஒரு மணி நேரம் வீடியோ கேசட்டுக்குள் அடக்கி, சுருக்கித்தான் காண்பிக்கிறார்கள். அந்த நாள் முழுவதும் இந்த அவையில் என்னென்ன நிகழ்ச்சிகள் நடைபெற்றனவோ எல்லாவற்றிலும் கொஞ்சம் காட்டுகிறார்கள். இதில் நீங்கள் கவனிக்கவேண்டிய ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசுவதை அந்த கேசட்டில் பார்க்கவே முடியாது. கேசட்டில் மட்டுமல்ல; பொதுவாக இந்த அரசு வந்தது முதல், இந்தப் பேரவை அமைந்தது முதல் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பே கிடைப்பதில்லை. பெரும்பாலும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தலைவர்களும்தான் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு நானும் மற்ற அமைச்சர்களும்

பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். நேற்றையதினம்கூட இந்த அவையில் நடைபெற்ற நிகழ்வுகளை நமது Information Division பிரிவினர், Film Division பிரிவினர் cassette தயாரித்துக் காண்பிக்கின்றபோது, விழுப்புரம் நகர்மன்றப் பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி என்னென்ன பேசினாரோ கிட்டத்தட்ட அவ்வளவையும் காண்பித்தார்கள். அதைப்போலவே, திரு. ஹேமச்சந்திரன் பேசியதையும், திரு. பழனிசாமி பேசியதையும், இதர உறுப்பினர்கள் பேசியதையும், எல்லாவற்றையும் காட்டிவிட்டு அவர்கள் என்ன கருத்து சொன்னார்களோ அதற்கு நாங்கள் சொல்கின்ற பதிலையும் காட்டுகிறார்கள். ஆகவே ஒருதலைப்பட்சமாக நிச்சயமாக இந்த அரசு நடந்துகொள்ளவில்லை. Information பிரிவோ Film Division பிரிவோ, ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்ளவில்லை. இதில் குற்றம் குறை ஏதேனும் இருக்குமேயானால் மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவரின் பார்வையில்தான், கண்ணோட்டத்தில்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்திலே பாரபட்சம் இல்லாமல் எல்லா உறுப்பினர்களுடைய பேச்சுகளும் காட்டப்படுவதாகச் சொன்னார்கள். இப்படி பாரபட்சம் இல்லாமல் இருக்கின்ற நேரத்திலே, இந்த அவையிலேகூட எல்லாப் பத்திரிகையாளர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது. பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற அனுமதியைப்போல எல்லாத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கலாமே, அதிலே தவறு இல்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, அதைப்பற்றி பின்னாலே பேசுவோம். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு)

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, I am on a point of order.